உ

கடவுள் துணை.

நீதிச்சிந்தாமணி- வெள்ளைச்சிந்தாமணி

என்று வழங்குகின்ற

விவேகசிந்தாமணி.

இஃது.

சரவணபுரம்

சண்முகமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

புரசபாக்கம்,

ஏழுமலைப்பிள்ளை

யவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

குரோதன ௵ வைகாசி ௴.

உ

விவேகசிந்தாமணி.

நேரிசைவெண்பா.

அல்லல்போம்வல்வினைபோ மன்னைவயிற்றிற்
பிறந்த-தொல்லைபோம் போகாத்துயரம்போ-
நல்ல-குணமதிகமா மருணைக்கோபுரத்தின்மே
வுங்-கணபதியைக்கைதொழுதக்கால் .. ... *

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஆபத்துக்குதவாப்பிள்ளை யரும்பசிக்குதவா
வன்னம், தாபத்தைத்தீராத்தண்ணீர் தரித்திரம
றியாப்பெண்டிர், கோபத்தையடக்காவேந்தன்
குருமொழிக்கொள்ளாச்சீஷர், பாபத்தைத்தீ
ராத்தீர்த்தம் பலனில்லையேழுந்தானே.....(க)

பிள்ளைதான்வயதின்மூத்தாற்பிதாவின்சொ
ற்புத்திகேளான், கள்ளிநற்குழலாண்மூத்தாற்க
ணவனைக்கருதிப்பாராள், தெள்ளறவித்தைகற்
றோற் சீடனுங்குருவைத்தேடான், உள்ளநோய்பி
ணிசமர்ந்தா லுலகர்பண்டிதனைத்தேடார் (உ)

குக்கலைப்பிடித்துநாவிக் கூண்டினிலடைக்
துவைத்து, மிக்கதோர்மஞ்சள்பூசிமிகுமணஞ்
செய்தாலுந்தான், அக்குலம்வேறதாமோ வதி
ன்மணம் புனுகுண்டாமே, குக்கலேகுக்கல
ல்லாற் குலந்தனிற்பெரியதாமோ........ .. (ங)

குக்கல்-என்பதுநாய்.

ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித்துண்மை பேசி, உப்பிலாக்கூழிட்டா லுமுண்பதேயமிர்த மாகும், முப்பழமொடுபா லன்ன முகங்கடுத்தி டுவாராயின், கப்பியபசியின்போக்கிற் கடும்பசிந ல்லதாமே .... (௪)

கதிர்பெறுசெந்நெல்வாடக் கார்குலங்கண்டு சென்று, கொதிதிரைக்கடலிற்பெய்யுங் கொள் கைபோற்றுவலபத்தே, மதிதனம்படைத்தபே ர்கள்வாடினோர்முகத்தைப்பாரார், நிதிமிகப்ப டைத்தோர்க்கீவார் நிலையில ர்க்கீயமாட்டார் ()

ஆலிலைப்பூவுங்காயு மளிதருபழமுமுண்டே ல், சாலவேபட்சி யெந்நாளுந் தங்குடியென்றேவா ழும், வாலிபர்வந்துதேடிவந்திப்பார்கோடிகோ டி, ஆலிலையாதிபோனா லங்குவந்திருப்பாருண் டோ .... (௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பொருப்பாலை விரும்புவர்கள் காமப்பாலி டைமூழ்கிப் புரள்வர்கீர்த்தி, பருப்பாலாமறப் பாலைகனவிலுமேவிரும்பார்க ளறிவொன்றில் லார், குருப்பாலக் கடவுளர்பால் வேதியர்பாற் பாவலர்பாற் கொடுக்கக்கோரார், செருப்பாலே யடிப்பவர்க்கு விருப்பாலேகோடிசெம்பொன் சேவித்தீவார் .... (௭)

கொச்சகக்கலிப்பா.

தண்டாமரையினுடன்பிறந்துந் தண்டேனு

நிலையிலார் - தரித்திரர்.

சரமண்டூகம், வண்டேகானத்திடையிருந்துவ
ந்தேகமல மதுவுண்ணும், பண்டேபழகியிருந்
தாலு மறியார்புல்லோர்நல்லோரைக், கண்டே
களித்தங்குறவாடித்தம்மிற்கலப்பார்கற்றோரே ()

கலிநிலைத்துறை.

வானரமழைதனினனையத்தூக்கணங், குருவொ
ருநெறிசொலத்தாண்டிப்பித்திடும், ஞானமுங்
கல்வியுநவின்றநூல்களும், ஈனருக்குரைத்திடி
லிடறதாகுமே ... . (௧)

வேறு, வண்டுமொய்த்தனையகூந்தன் மதன
பண்டாரவல்லி, கெண்டையோடொத்தகண்ணு
ள்கிளிமொழிவாயினால், கண்டுசர்க்கரையோ
தேனோ, சனியொடுகலந்தபாகோ, அண்டர்மா
முனிவர்க்கெல்லா மமிர்தமென்றளிக்கலாமோ()

கற்பகத்தருவைச்சார்ந்தகாகமுமமிர்தமுண்
ணும், விற்பனவிவேகமுள்ள வேந்தரைச்சேர்
ந்தோர்வாழ்வார், இப்புவிதன்னிலென்று மிலவு
காத்திடுங்கிளிப்போ, லற்பரைச்சேர்ந்தோர்வா
ழ்வதரிதரிதாகுமம்மா.............................(௰௧)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

ஆலகால விஷத்தையுநம்பலா மாற்றையும்
பெருங்காற்றையுநம்பலாங், கோலமாமதயானை
யைநம்பலாங் கொல்லும்வேங்கைப் புலியையு
நம்பலாம், காலனார் விடுதூதரைநம்பலாம்கள்ள
ர்வேடர் மறவரைநம்பலாஞ், சேலைகட்டியமா

தாைநம்பினூற் றெருவினின்றுதியங்கித்தவிப்ப
வேறு. [ரோ

சங்குவெண்டாமறைக்குத் தந்தைதாயிரவித ண்ணீர், அங்கதைக்கொய்துவிட்டா லழுகச்செ ய்தந்நீர்கொல்லுந், தங்கவண்கனாயிற் போட் டாற்சூரியன்சாயந்துசொல்வான், தங்களினிலை மைகெட்டாலிப்படிதபங்குவாரோ ....(யங)

வேறு. நாய்வாலையளவெடுத்துப் பெருக்கித் தீட்டி னற்றமிழை யெழுதவெழுத் தாணியா மோ, பேய்வாழுஞ்சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப், பெரியவிளக்கேற்றிவைத்தால்வீடதா மோ, தாய்வார்த்தைகேளாத சகசண்டிக்கென் சாற்றிடினுமுழுத்தகுணந்தவிரமாட்டான், ஈ வாரையீயவொட்டாதிவனுமீபா னெழுபிறப்பி னுக்கடையாமிவன்பிறப்பே...... ......(யச)

வேறு. வெம்புவாள்விழுவாள்பொய்யேமே ல்விழுந் தழுவாள்பொய்யே, தம்பலந்தின்பா ள்பொய்யே சாகின்றேனென்பாள் பொய்யே அம்பிலுங்கொடியகண்ணா ளாயிரஞ்சிந்தையா ளை, நம்பினபேர்களெல்லா நாயினுங்கடையா வாரே..(யரு)

வேறு. கெற்பந்தான் மங்கையருக்கழகுகுன் றும் கேள்வியில்லாவரசனுலகம்பாழாந், தற் புத்திமந்திரியாலரசுகெனஞ் சொற்கேளாப்பிள் ளைகளாற்குலத்துக்கீனம், நற்புத்திகற்பித்தால ற்பர்கேளார், நன்மைசெய்யத்தீமையுடனயந்

துசெய்வார், அற்பரோடிணங்கிவிடிற் பெருமை
தாழு மரியதவங்கோபத்தாலழிந்துபோமே ()
வேறு. தன்னுடன்பிறவாத தம்பிதனைப்பெ
ருத்தாயார்தந்தை, அன்னியரிடத்துச்செல்வமு
ரும்பொருள்வேசிபாசை, மன்னியவேட்டின்க
ல்விமறுமனைபாட்டிவாழ்க்கை, இன்னவாங்கரு
மமெட்டு மிடுக்கத்துக்குதவாவன்றே .... (௰௭)

வேறு.

ஒருநான்கு மீரையு மொன்றேகேளா யுண்
மையா யையரையு மரையுங்கேட்டேன், இரு
நான்கு மூன்றுமொரு வொன்றுஞ் செல்லாயி
ம்மொழியைக் கேட்டபடி யீந்தாயாயின்பெ
ருநான்கு மறுநான்கும் பெறுவாய் பெண்ணே
பின்னையோர் மொழிபுகல வேண்டாமின்றே,
சரிநான்கு பத்துமொருபதினைந்தாலே, சகிக்க
முடியாதினி யென்சகியேமானே .. ..(௰௮)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

தேனுகர்வண்டுமதுதனையுண்டு தியங்கியேகி
டப்பதைக்கண்டு, தானதைச்சம்புவின்கனியெ
ன்றுதடக்கைபாலெடுத்துமுன்பார்த்தாள், வா
னுறுமதியம் வருவதென்றெண்ணி மலர்க்கரங்
குவியுமென்றஞ்சிப், போனதுவண்டோபறந்த
தோபழந்தான் புதுமையோவிதுவெனப் புக
[ன்றாள்.

வேறு

கருதியநூற்கல்லாதான் மூடனாகுங், கணக்க
றிந்துபேசாதான் கசடனாகும், ஒருதொழிலு

யில்லாதான் * மூகடியாகு, மொன்றுக்குமுதவாதான்செம்பநாகும், பெரியோர்கண்முன்னின்றமரத்தைப்போலும், பேசாமலிருப்பவனே பேயனாகும், பரிவுசொலித்தழுவினவன்பசப்பனாகும், பசிப்பவருக்கிட்டுண்ணான் பாவியாமே.

வேறு.

தாங்கொணாவறுமைவந்தாற்சபைதனிற்செல்லரானும், வேங்கைபோல்வீரங்குன்றும்விருந்தனைக்காணநாணும், பூங்கொடி மனையாட்கஞ்சும் புல்லருக்கிணக்கஞ்செய்யும், ஓங்கியவறிவுகுன்று முலகெலாம்பழிக்குந்தானே ... (உக)

கலிவிருத்தம்.

அரும்புகோணிலதுமணங்குன்றுமோ ... *
கரும்புகோணிடிற்கட்டியும்பாகுமாம் ... ... *
இரும்புகோணிடி லியானையைவெல்லலாம் .. *
நரம்புகோணிடி னமதற்கென்செய்வோம் ( )

(வேறு.) அன்னையேயன்னையதோழியறந்தனை வளர்க்குமாதே, உன்னையோருண்மை கேட்பே னுலகறிந் துரைத்தல்வேண்டும், என்னையேபுணருவோர்களெனக்குமோரின்பநல்கிப், பொன்னையுங் கொடுத்துப்பாதம் போற்றினில்வீழ்வதேனோ ... ... (உரு)

பொம்மெனப்பணைத்துவிம்மிப் போர்மதன்மயங்கிவீழுங், கொம்மைசேர்முலையினாளே

* மூகடி-மூதேவி.

கூறுவேனென்றுகேண்மோ செம்மையிலறஞ்
செய்யாதார்திரவியஞ்சிதறவேண்டிநம்மையும்
கள்ளருஞ்சூதநான்முகன்படைத்தவாறே.(உச)

பொன்னொடு மணியுண்டானாற் புலையனுங்கி
ளைஞனென்று, தன்னையும்புகழ்ந்துகொண்டுஜா
தியின்மணமுஞ் செய்வார், மன்னராயிருந்தபே
ர்கள்வகைகெட்டுப்போவாராயின், பின்னையுமா
ரோவென்றும்பசுவாரோசுவாரோ ... ...(உரு)

கலிவிருத்தம்.

வேதமோதியவேதியர்க்கோர்மழை ...... *
நீதிமன்னர்நெறியினுக்கோர்மழை ...... *
மாதர்கற்புடைமங்கையர்க்கோர்மழை ... ...*
மாதமூன்றுமழையெனப்பெய்யுமே ... (உசா)
அரிசிவிற்றிடுமந்தணர்க்கோர்மழை ...... *
வரிசைதப்பியமன்னருக்கோர்மழை ...... *
புருஷனைக்கொன்றபூவையர்க்கோர்மழை .. *
வருஷமூன்றுமழையெனப்பெய்யுமே...(உஎ)

வேறு.

திருப்பதிமிதியாப்பாதஞ் சிவனடிவணங்கா
ச்சென்னி, இறப்பவர்க்கீயாக்கைக ளினியசொ
ற்கேளாக்காது, புரப்பவர்தங்கள்கண்ணீர் பொ
ழிதரச்சாசாத்தேகம், இருப்பினும் பயனென்
காட்டிலெரிப்பினுமில்லைதானே... ...(உஅ)

தன்னுடன் றனக்கொவ்றீந்தால் தக்கதோர்
பலமதாகு, மன்னிபல் வேசிக்கிருந்தால் மெய்ப்
யிலே விபாதியாகு, மன்னிய வுறவுக்கிருந்தால்

வருவது மபக்கமாகும், அன்னியபாத்துக்கீந்
தாலாருயிர்க்குதவியாமே ... .(௨௯)

(எண்சீரடியாசிரியவிருத்தம்.)

படியினைப்பொழுதேதவளைத்திடுபச்சைநாவி
யைநம்பலாய், பழிநமக்கென வழிமறித்திடுப
ழைய * நீலியைநம்பலாங், கொடுமதக்குவடெ
னவளர்ந்திடுகுஞ்சரத்தையுநம்பலாங், குலுங்க
பேசிநகைத்திடுஞ்சிறுகுமரர்தம்மையுநம்பலா
ங், கடையிலக்கமுமெழுதிவிட்ட கணக்கர்தம்
மையுநம்பலாங், காக்கைபோல்விழிபார்த்திடுங்
குடிக்காணியாளனை நம்பலாம், நடைகுலுக்கியு
முகமினிக்கியுநகைநகைத்திடுமாதனை, நம்பொ
ணாதுமெய்நம்பொணாதுமெய்காணுமே (௩௰)

(கலிநிலைத்துறை)

வண்டுகளிருந்திடின்மதுவையுண்டிடுந் ...*
தண்டமுழிருந்திடிற்சங்கஞ்சேர்ந்திடுங்.....*
குண்டுணியிருந்திடிற்கோள்கண்மிஞ்சிடும்...*
பெண்டுகளிருந்திடிற்பெரியசண்டையாம்...()

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கற்புடைய மாதர்கொங்கை கவரிமான்மயிரி
ன்கற்றை, வெற்புறுவேங்கையின்றோல் வீரன்
கைவெய்யகூர்வேல், அற்பர்தம் பொருள்கடா
மு மவரவரிறந்தபின்னே, பற்பலர் கொள்வாரி
ந்தப்பாரினிலுண்மைதானே.......... ...(௩௨)

* நீலி-காளி

வீணர்பூண்டாலுந்தங்கம் வெறும்பொய்யர்
மேற்பூச்சென்பார், பூணுவார்தராப்பூண்டாலு
ம்பொருந்தியதங்கமென்பார்,காணவேபனைக்கீ
ழான்பாற்குடிக்கினுங்கள் ளேயென்பார், பானு
லகத்தோர்புல்லர்வழங்குவை மெய்யென்பாரே

(கலிநிலைத்துறை)

* ஓரியேமீனுவந்தாணிழந்தையோ ..... *
நாரியேகண்பிழைநாட்டிவில்லையோ .... *
பாரியகணவனைப்பழுதுசெய்துநீ .... *
நீரிலேயிருப்பது நிலைமையல்லவே... ...(௩௪)
(அறுசீரடியாசிரியவிருத்தம்.) சம்புவேயென்
னைபுத்தி சலந்தனில்மீனைநம்பி, வப்புறவடத்
தைப்போட்டுவானத்தைப்பார்ப்பதேனோ, அ
ப்புவிமாதேகேளா யரசனையசலவிட்டு, வம்ப
னைக்கைபிடித்தவாறுபோலாயிற்றன்றோ (௩௫)

மூப்பிலாக் குமரிவாழ்க்கை முனையிலாவரச
ன்வீரந், காப்பிலாவிளைந்தபூமிக்கனாயிலா திரு
ந்தவேரி, கோப்பிலான் கொண்டகோலம் குரு
விலான்கொண்டஞானம், ஆப்பிலாச்சகடுபோ
லேயழியுமென்றுரைக்கலாமே .... (௩௬)

(சந்தக்கலி விருத்தம்.)

பொன்னின்மணிகிண் கிணிசிலம்பொலிபுலம்ப,
மின்னுமணிமேகலைகண் மெல்லென வொலிப்
பச், சின்னமலர்கொண்டுசில சேடியர்கள்சூழ*
அன்னமெனவல்லவெனவாமெனவுரைத்தார் ()

* ஓரி-நரி.

(அருசீரடியாசிரியவிருத்தம்.)

கானலைநீரென்றெண்ணிக் கடுவெளிதிரியுமா
ன்போல், வானுறுமிலவுகாத்த மதியிலாக்கிள்
ளையேபோல், தேனினைக்கண்டு தம்பி திடங்கிய
லைகலைமயேபோல், நானுனை யரசன்றெண்ணி
நாளவும்போக்கினேனே........ ... ... (௩௮)

(குறுங்கழிநெடில்-விருத்தம்)

சங்குமுழங்குந் தமிழ்நாடன் றன்னைநினைந்
தபோதெல்லாம், பொங்குகடலு முறங்காது
பொழுதோர ளும்விடியாது, திங்களுறக்கும்
புள்ளுறக்குந் தென்றலுறங்குஞ் சிலகாலம், எங்
குமுறங்குமிராக்கால மென்கணிரண்டுமுறங்கா
[வே

(அறுசீரடி-விருத்தம்.)

அரவினையாட்டுவாரு மருக்களி றாட்டுவாரு
ம், இரவினிற்[illegible]னிப்போவாரு மெரிநீர்நீய்ந்து
வாரும், விரைசெறிகுழலியானவேசையைவிரு
ம்புவாரும், அரசனைப்பகைத்திட்டாருமாருயி
ரிழப்பார்மாதோ ....(௪௰)

வாழ்வது வந்தபோது மனந்தனின் மகிழ
வேண்ட[illegible]ந், தாழ்வதுவந்ததானுந் தளர்வமோ
தக்கோர்மிக்க, ஊழ்வினைவந்ததானு லொருவ
ரால் விலக்கப்போமோ, ஏழையாயிருந்தோர்
பல்லக்கேறுதல்கண்டிலீரோ ....(௪௧)

(எழுசீரடியாசிரியவிருத்தம்)

பருப்பதக்கல்போனிறைந்திடு நவமணிப்ப
லன்களைக் கொடுத்தாலும், விருப்பநீங்கியகண

வரைத்தழுவுதல் வீணதாம்விளையார்ந்த, குரு
க்கொள் சந்தனக்குழம்பினை யன்றொடுகுளிர்
தரவணிந்தாலும், செருக்குமிஞ்சியவற்பர்தந்
தோழைமைசெப்பவுமாகாதே...... ... (௪௨)

(கலிநிலைத்துறை)

பெருத்திடுசெல்வமென்பிணிவந்துற்றிடில்,
உருத்தெரியாமலேயொளிமுழங்கிடும் .. ... *
மருத்துளதோவெனில்வாடகத்திலை....... ...*
தரித்திரமென்னுமோர்மருந்திற்றீருமே(௪௩)

(அறுசீரடியாசிரிய-விருத்தம்.)

அத்தியின்மலரும்வெள்ளையாக்கைகொள்கா
க்கைதானும், பித்தர்தமனமுநீரிற் பிறந்தமீன்
பாதந்தானும், * அத்தன்மால்பிரமதேவனால
ளவிடப்பட்டாலுஞ், சித்திரவிழியார்நெஞ்சந்
தெரிந்தவரில்லைகண்டீர் ....(௪௪)

சொல்லுவார்வார்த்தைகேட்டு தோழைமை
யிகழ்வார்புல்லர், நல்லவர்விசாரியாமற் செய்வ
ரோநரிசொற்கேட்டு, வல்லியும் பசுவுக்கூடிபா
ண்டதோர் கதையைப்போல, புல்லியவொருவ
ராலேபோகுமேயற்பர்நேசம் ....(௪௫)

(கலிவிருத்தம்.)

கதலிவீரர்களத்திடையையுனும்........ *
குதலைவாயிற்குழவிகள்வையினு.......... *
மதனலீலையின்மங்கையர்வையினும்......... *
இதமுறச்செவிக்கின்பம்விளையுமே......(௪௬)

* அத்தன்-பரமசிவன்.

(வேறு.) புத்திமான்பலவானவான்பலமுளான்
புத்தியற்றால், எத்தனைவிதத்தினாலு மிடறுதவ
ந்தேதீரு; மற்றொரு சிங்கந்தன்னை வருமுயல்
கூட்டிச்சென்றே, உற்றதோர்கிணற்றிற்சாயல்
காட்டியவுவண்மையேபோல்............ ... (௪௭)

மானமுள்ளோர்கடன்னோர்மயிரரினுயிர்வா
ாத, கானுறுசவரிமான்போற் கனம்பெறுபுக
ழ்பூண்பார், மானமொன்றில்லார்தாமுமழுக்
கலாய்ச்சவுங்கலாகி,ஈனமாங்கழுதைக்கொப்பா
யிருப்பரொன் றுணாக்கலாமே ....(௪௮)

(இதுவுங்கலிவிருத்தம்)

கழுதைகாவெனக்கண்டு நின்றாடியவலகை,
தொழுதுமிட்டுமக் கழுதையைத் துதிசெய்வ
துதான்,பழுதிலாதமக் கார்திகராமெனப் பாரு
முழுது மூடரா மூடர்கொண்டாடிய முறை
(அறுசீரடியாசிரியவித்தம்.) [போல்

ஆசாரஞ்செய்வாராகி லறிவொடுபுகழுமுண்
டாம், ஆசாரநன்மையாலவனியிற்றேவராவார்
ஆசாரஞ்செய்வாராகி லறிவொடுபுகழுமற்றுப்
பேசார்போற் பேசுமாகிப்பிணியொடுநரகில்வீ
ழ்வார் ... ...(௫௰)

செல்வம்வந்துற்றபோது தெய்வமுஞ்சிறி
துபேணார், சொல்வதையறிந்துசொல்லார்சுற்
றமுந்துணையும்பேணார், வெல்வதே கருமமல்
லால்வெம்பகைவலிதன்றெண்ணார், வல்வினை
விளையும்பாரார்மண்ணுமேல்வாழுமாந்தர் (௫௧).

(கலித்துறை.)

யானையைச்சலந்தனிலிழுத்தவக்கரா.... *
பூனையைக்கரைதனிற்பிடிக்கப்போகுமோ... *
தானையுந்தலைவருந்தலம்விட்டேகினால் .... *
சேனையுஞ்செல்வமுந்தியங்குவார்களே. (௫௨)

(வேறு) தொண்டநற்கலைகளோடுங்குணமிலாக் கோதைமார்காக், கண்டுகொண்டிருப்பதல்லாற்கலவிலும்புல்லலொண்ணா, தண்டெனமதுவையுண்ண வோவியப்பூவில்வீழ்ந்த, வண்டினம்பட்டபாடுமனிதநம்படுவர்தாமே ... ... (௫௩)

மயில்குயில்செச்சாலன்னம்வண்டு கண்ணாடியன்றி, அயிலெயிற்றரவுதிங்களாதவனாழிகொக்கோம், பெரும்வண்கமலம்பன்மூன்றுறுகுணமுடையோர்தம்மை, இயலுறுபுவியோர்போற்றுமீசனென்றெண்ணலாமே ... (௫௪)

தெருளிலாக்கலையினர்செருக்குமாண்மையும், பொருளிலாவறிஞர்தம்பொறியடக்கமும், அருளிலாவறிஞர்தமௌனதாசமுங், கருவிலாமங்கையர்கற்புமொக்குமால் ... ... (௫௫)

(இதுவுங்கலிவிருத்தம்.)

* மங்குலப்பதினாயிரம்யோசனைமயிற்கண்டுநடமாடும், திக்குபானூறாயிரம்யோசனைதாமரைமுகம்விள்ளும், திங்களாதவற்கிரட்டியோசனையுறச்சிறந்திடுமரக்காம்பல், எங்கணுமன்பராயிருப்பவரிதயம்விட்டகலாரே ...... (௫௬)

*மங்குலம்-மேகம்-பானு-சூரியன்.

(வேறு) சந்திரனில்லாவானந் தாமரையில்லாப்
பொய்கை, மந்திரியில்லாவேந்தன் மதகரியில்
லாச்சேனை சுந்தரப்புலவரில்லாத்தொல்சபை சு
தரில்வாழ்வு, தந்திகளில்லாவீணை ஸ்தனமில்லா
மங்கைபோலாம் .... (௫௭)

(கலித்துறை)

குரைகடல்வறுமையுங் குறத்தியுண்மையும் *
நரையறமருந்தினைந் திண்மைநண்ணலும் .. *
விரைசெறிகுழலினாள் வேசையாசையும் .. *
அரைசுறவடைவதுமஞ்சுமில்லையே...... (௫௭)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மூடவனைமூர்க்கன்கொன்றால் மூர்க்கனை முனி
தான்கொல்லு, மடவனைவலியான் கொன்றால்மற
விதானவனைக்கொல்லுந், தடவரைமுலைமாதே
யித்தரணியினுள்ளோர்க்கெல்லா, மடவனையடி
த்தகோலு மவனையடிக்குங்கண்டாய் (௫௯)

பொருளிலார்க் கின்பமில்லை புண்ணியமி
ல்லையென்று, மருவியகீர்த்தியில்லை மைந்தரிற்
பெருமையில்லை, சுருதியகருமமில்லைகதிபெற
வழியுமில்லை, பெருநிலந்தனிற் சஞ்சாரப்பிரே
தமாய்த்திரிகுவாரே .... (௬௰)

தூம்பினிற்புதைத்தகல்லுந் துகளன்றிச்சுட
ர்கொடாது, பாம்புக்குப்பால்வார்த்தாலும்பழு
தேநன்மைதாரா. வேம்புக்குத்தேன்வார்த்தா
லும் வேப்பிலைக்கசப்புமாறு, தாம்பலநூல்கற்
றால்துர்ச்சனர்நல்லோராகாரன்றே........ (௬௧)

(அறுசீரடியாசிரியவிருத்தம்)

கல்லாதமாந்தரையுங்கடுங்கோபத் துரைகளை
யுங்காலந்தேர்ந்து, சொல்லாதவமைச்சரையுந்
துயர்க்குதவாத்தேவரையுஞ்சுருதிநூலில், வல்
லாவந்தணர் தமையுங்கொண்டவனுடெந்நாளு
ம்வலதுபேசி, நல்லார்போலருகிருக்குமனை
யையுமொருநாளுநம்பொணாதே ... (௯௨

(இதுவுமது-வேறு)

தேளதுதீயில்வீழ்ந்தாற்செத்திடாதெடுத்த
பேரை, மீளவேகொடுக்கினாலேமெய்யுறக்கோ
ட்டலேபோல், ஏளனம்பேசித்தீங்குற்றிருப்ப
தையெதிர்கண்டானுங், கோளினர் தமக்குநன்
மைசெய்வதுகுற்றமாமே .... (௯௩)

அறிவுளோர்தமக்குநாளுமரசருந்தொழுது
வாழ்வார் நிறைவொடு புவியிலுள்ளோர் நேச
மாய்வணக்கஞ்செய்வார், அறிவுளோர் தமக்கு
ம்பாதோரசடதுவருமேயாகில், வெறிபொன்றி
கழுவாரிம்மேதினியுள்ளோர்தாமே .. (௯௪)

குருவுபதேசமாதர் கூடியவின்பந்தன்பால்,
மருவியறியாயங்கல்வி வயதுதான்செய்ததன்ம
ம், அரியமந்திரம் விசாரமாண்மையிங்கிவைக
ளெல்லாம், ஒருவருந்தெரியவொண்ணாதுரைத்
திடலழிந்தும்பாமே ... . (௯௫)

இடுக்கினால்வறுமையாகியேற்றவர்க்கிசைந்த
செல்வந், கொடுப்பதே மிகவுநன்று குற்றதே
யின்றிவாழ்வார், தநித்ததை, விலக்கினேற்கு

தீதக்கநோய்ப்பிணிகளாகி, உடுக்கவேபுடவாயின்
றியுஞ்சோறும்வெல்லமாமே ... ... (௬௬)
மெய்யதைச்சொல்வாராகில் விளங்கிடுமேலு
நன்மை, வையகமதனைக்கொள்வார் மனிதரிற்
றேவராவார், பொய்யதைச்சொல்வாராகிற்பே
சனமற்பமாகும், நொய்யவரிவர்களென்றுநோ
க்கிடாரறிவுள்ளோரே ... ... (௬௭)

(சந்தக்கலிவிருத்தம்.)

தந்தையுரைதட்டினவன் றாயுரையிகழ்ந்தோ
ன், அந்தமுறுதேசிகர்த மாணையைமறந்தோ
ன், வந்தமுறைவேதநெறி மாறினவர் நால்வர்,
செந்தழலின்வாயினிடைசேர்வதுமெய்கண்டீர்

(அறுசீரடியாசிரிய-விருத்தம்.)

நாரிகள் வழக்கதாயி னடுவறிந் துரைத்த ர
சுத்தர், எரிபோற்பெருகிமண்மே லிருகண்ணு
ம்விளங்கிவாழ்வார், ஓரமேசொல்வாராகிலோங்
கியகிளையுமாண்டு, தீரவேகண்ணிரண்டுந் தெரி
யாதுபோவர்தாமே ....(௬௯)
துப்புறச் சிவந்தவாயா யேபஞ்சணையின்மீ
தில், ஒப்புறக்கணவனோடே யோர்லீலைசெய்யு
ம்போது, கற்பகஞ்சேர்ந்தமார்பிற்கனதனமிர
ண்டுந்தைத்தே, அப்புறமுருவிற்றென்றே யங
ங்கையாற்றடவிப்பார்த்தாள் .. ... (௭௰)
எரிநீரிருந்தபோதங்கிருந்தனபட்சியெல்லா
ம், பாரிநீர்மறந்தேபோதப் பறவையும் இருப்ப

றுண்டோ, பாரினையாளும் வேந்தன் பட்சமு மறந்தபோதே, யாருமேதிலை நில்லாம லவரவ ரோகுவீரோ ... . (௭௧)

(குறுங்கழிநெடில்விருத்தம்.)

மண்ணார்சட்டிகரத்தேந்தி மறநாய்கௌவுங் காலினராய், அண்ணார்ந்தோடியிரப்பாரையறி ந்தோமறிந்தோ மம்மம்மா, பண்ணார்மொழி யார்பாலடிசில், பைம்பொற்கலத்திற் பரிந்தூட்ட, உண்ணாநின்றேயொருவருக்கு முதவாமாந் தரிவர்தாமே .... (௭௨)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மண்டலத்தோர்கள்செய்த பாவமன்னவரைச்சேருந், திண்டிறன்மன்னர்செய்ததீங்குமந்திரியைச்சேருந், தொண்டர்கள் செய்ததீதுந் தொடர்ந்துதங்குருவைச்சேருங், கண்டனமொழியாள்செய்தகன்மமுங்கணவர்க்காமே (௭௩)

நற்குணமுடையவேந்தை நயந்துசேவித்தலொன்று, பொற்புடைமகளிரோடு பொருந்தியேவாழ்தலொன்று, பற்பலரோடுநன்னூல் பகர்ந்துவாசித்தலொன்று, சொற்பெறுமிவைகண் மூன்றுமிம்மையிற்சொர்க்கந்தானே ...(௭௪)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

நீட்டையிலே புரிந்துமனத் துறவடைந்த பெரியோர்கணிமலன் றாளைக்கிட்டையிலேவ... டுத்தமுத்தி பெறுமளவும் பெரியசுகங் கிடைப்

டார்காமு, வெட்டையிலேமதிமயங்கிச் சிறுவ
ருக்கு மணம்பேசி விரும்பித்தாலி, கட்டையி
லேதொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டு
ங்கவலைதானே... ... ...(௭௫)

(சந்த விருத்தம்.)

அன்னம்பழித்தநடையாலம்பருத்தவிழிப
மிர்தம்பழித்தமொழிகள், பொன்னம் பெருத்
தமுலை வன்னங்கறுத்தகுழல் சின்னஞ்சிறுத்த
விடைபெண், என்னெஞ்சுருக்கவவடன்னெஞ்
சுகற்றகலைபன்னென் றுரைப்பதினிநான், சி
ன்னஞ்சிறுக்கியவள்வில்லக்கமிட்டபடி தெய்வ
ங்களுக்கபயமே ....(௭௬)

(எண்சீரடியாசிரியவிருத்தம்.)

ஆவிகமழைபொழிய வில்லம்விழ வகத்தி
ளள் நோய்த்தலில்வருந்தவடிமைசாக, மாவீரம்
போகுதென்று விதைகொண்டோட வழியிலே
கடன்காரர்மறித்துக்கொள்ளச், சாவோலைகொ
ண்டொருவ னெதிரேசெல்லச், தள்ளாதவிருந்
துவரச்சர்ப்பந்தீண்டச், கோவேந்தர் தமதுரி
மைப்பகுதிகேட்கக் குருக்களவந்துதட்சணைக்
குக்குறுக்கிட்டாரே ....(௭௭)

(அறுசீரடியாசிரியவிருத்தம்)

தாய்பகைபிறர்நட்பாகிற்றந்தைபுங்குணவா
னாகில், வாய்பகைமனைவியாருமாவழகுற்றபோ
து, சேய்பகைபிள்ளைதானும் பெருமைநூல்க
ல்லாவிட்டால், செய்பகை யொருவற்காகுமே

ன்றவர்தெளிந்தநூலோர் ....(௭௮)

நிலைதளர்ந்திட்டபோது நீணிலத் துறவுமில்லைச், சலமிருந்தகன்றபோது தாமரைக்கருக்கன்கூற்றம், பலவனமெரியும்போது பற்றுதீக்குறவாங்காற்று, மெலிவதுவிளக்கேயாகில்மீண்டுமக்காற்றேகூற்றாம் .... (௭௯)

வடித்தபா வாணர்தக்கோர் மறையவரிறப்போர்க்கெல்லாங், கொடுத்துடர்வறுமையுற்றார் கொடாதுவாழ்ந்தவரார்மண்மேல், எடுத்தநாடுண்டநீருமெடாதகாட்டகத்துநீரு, மடுத்தகோடையிலேவற்றியல்லதிற்பெருகுந்தானே (௮௰)

(குறுங்கழிநெடில்விருத்தம்,)

உணங்கியொருகான்முடமாகியோர்கண்ணிழந்துசெவியிழந்து, வணங்குநெடுவாலறுப்புண்டுவயிறுமுதுகிலுலர்ந்தொட்டி, அணங்குநவியமுழுப்பெய்திட்டகலவாயோடுகழுத்தேந்திச், சுணங்கன்முடுகாலனைத்தொடர்ந்தாலெவனைக்காமன்றுயர்செய்யான் .... (௮௧)

(எழுசீரடியாசிரிய-விருத்தம்.)

கன்மனப்பார்ப்பார் தங்களைப் படைத்துக் காகத்தையென்செயப்படைத்தாய், துன்மதிவணிகர் தங்களைப்படைத்துச் சோரனையென்செயப்படைத்தாய், வன்மனவடுகர்தங்களைப்படைத்துவானரையென்செயப்படைத்தாய், நன்மனைதோறும் பெண்களைப்படைத்து நமனையென் செயப்படைத்தனையே ... . (௮௨)

(கலிவிருத்தம்)

நம்புநீர்த்துறைநல்லவர்க்கல்லவென் .... *
றெம்புதூக்கியிழுக்குலைவைத்தார்கள்போல் . *
பம்புமேகலைபாவையர்க்கல்லவென் .... *
றெம்புபோல்வெளுத்தேங்கியசுருஞ்சியே... (௩௩)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

கோளரி யடர்ந்தசுக ட்டிற் குரங்கில்லைவத்த மிர்தமூட்டிக், கோணிற்றாக்கிலைவைத்துச் சுமந் தும்பருலைளர்த்த, ஆலணைக்கிணற்றிற்றள்ளியழு கில்லாருடவற்சேர்ந்தாள், காளநேர் கண்ணினா ளாங்கலைலிலும்நம்பொறுதே ... ...(௩௪)

(கொச்சகக்கலிப்பா)

சேய்கொண்டாருங்கமலச் செம்மலுடனே யரவப், பாய்கொண்டானும் பணியும்பட்டைச் சுரத்தானே, நாய்கொண்டாலுங் கொளலாநா றுவயதளவும், பேய்கொண்டாலுங் கொளலாம் பெண்கொள்ளலாகாதே ... ...(௩௫)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

நானமென்பது மணங்கமழ் பொருளது நா விலின்டதுவோசொல், ஊனுணக்குமேவன் ம டந்தையணிவதேயுபர்மூலைத் தடங்கோட்டில், ஆனதங்கதுபூசிருல்விங்கியதலைமயுமோ வென க்கேட்பக், காலவேட்டுவச்சேரிவிட் டகன்றன டிகமழ்நீலைவாணர் ... ... (௩௬)

(இது கலிவிருத்தம்.)

கொண்டுவிண்டடர்கருடல்வாட்க் கொருவரி

நாகம், விண்ட நாகத்தின்வாயினில் வெருண்டவ
ன்றேனா, மண்டுதேனாயின் வாயினிலகப்படுவ
ண்டு, வண்டு தேனுகரின்பமே மானிடவின்பம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கற்பூரப்பாத்திகட்டிக்கஸ்தூரி யெருப்போ
ட்டுக்கமழ்நீர்பாய்ச்சி, பொற்பூர முள்ளரியை
விதைத்தாலு மதன்குணத்தைப் பொருந்தக்
காட்டும், சொற்பேதையர்க்கறிவிங்கினி தாகவ
ருமெனவே சொல்லினலும், நற்போதம் வாராத
ங்கவரகுணமேமேலாகநடக்குந்தானே. (அஅ)

தண்டுலாவியதாமரைப்பொய்கையின் ...*
மொண்டுநீருமுகத்தருகேந்திலள்... .. ...*
கெண்டைகெண்டையென்றக்சனாயேறிலள்*
வெண்டைகாண்கிலணின்றுதடங்கினள் ...(அகூ)

(இதுவுங்கலிவிருத்தம்.)

நறவுசந்தனக்குழம்பொடு நறுஞ்சுவைநலம்
பெறவணிந்தாலும், சருவசந்தேக மனத்திடை
மாதரைத்தழுவலுமாகாதே, பருவதங்கள்போ
ற்பலபலநவமணிப் பைம்பொனு ஈந்தாலுங்,
செறுவமிஞ்சியமானிடர்தொழலைமிட்டலுமா
காதே.............. ... . (கூ௦)

அறுசீரடியாசிரிய-விருத்தம்.

நிலத்தினிற் சுனையின்மூழ்கி நின்றவடன்
றேனோ, குலைத்தலைமஞ்ஞைகண்டு கூவனக்கா
விலேச, முலைத்தலைபதனைக்கண்டு மும்மதக்கரி

வந்துற்ற, அலைத்தலைச் சிக்கமென்றக் களிறுகண்டேகிற்றம்மா ... ... (௧௧)

கரியொருதிங்களாறுகாணவன் மூன்றுநாளும், இருதலைப்புற்றிணுகயின்றினு மினாயீந்தன்று; விரிதலைவேடன்கையில விற்றுலைதநரம்பைக்கவ்வி - நரியனுர்பட்டபாடுநாளைநாம்படவேபோமே ... ... (௧௨)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பூதலத்தின்மானிடராய்ப்பிறப்பதரிதெனப் புகலவர்பிறந்தோர்தாமும், ஆதிமறைநூலின்முறைபருள்கீர்த்தியாந்தலங்களன்பாக் செய்துநீதிவழுவாதவகைவழக்குரைத்து நல்லோரைநேசங்கொண்டு, காதவழிபேரில்லார் கழுதையெனப்பாரிலுள்ளோர் கருதுவாரே .. (௧௩)

(குறுங்கழிநெடில்விருதம்)

ஆரம்பூண்டமணிமார்பா வயோத்திக்கரசேயண்ணலே கேள், ஈரமிருக்கமரமிருக்கவிலைசளுதிர்ந்தவாறேது, வாரங்கொண்டு வழக்குரைத்துமண்பேனின்றுவலிபேசி, ஓரஞ்சொன்ன குடியதுபோலுதிர்ந்துகிடக்குந்தம்பியபோ... (௧௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வல்லியந்தனைக்கண்டஞ்சி மரந்தனிலேறும்வேடன், கொல்லியப் பசியைத்தீர்த்த ரட்சித்ததுர்ப்பகைக்கொன்றுல், நல்லவன்றனக்குச்செய்தநலமிது மிக்கதாகும், புல்லர்க்கடமக்குச்செய்

தானுயிர் தனைப்போக்குவாரோ .... (௬௫)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

தன்மானங்குலமானந் தன்னைவந்தெபடைந்
தவர்கடங்கண்மானம், எம்மான மாகிலென்ன
மெவல்லவருஞ்சரியெனவேயெண்ணம்போந்த
நன்மானம்வைத் தெந்தநாளுமவர் தங்களுக்கு
நன்மைசெய்வோர், மன்மணிபடைந்தோனாக்
காக்கிற்றவள்ளலைவழுத்தலாமே ...(௬௬)

தன்னைத்தான்புகழ்வோருந் தன்குலமேபெ
ரிதெனவேதான் சொல்வோரும், பொன்னைத்
தான்தேடியருள் புரியாமலருள்சாத்து போன்
றின்றே , பின்னைப்போன் மனையாளைவீட்
டில்வைத்துவேலைசகசகமவிரும்புவோரும், அன
னைபிதாபாலலைப்பகைப்பொரு மறிவில்லா
க்கசடராமே ... ... (௬௭)

பெண்கள்சொற்கேட்கின்ற பேயனொனுங்
குலமூடப்பேடிலோபர், முன்னடைகளுக்கிணை
யில்லாமுனைவீரர்புருடனென மொழியொணு
தே, உண்டுலமுதிர்ப்பாருள்கீர்த்தியற மின்ன
தெனவுணர்வேயில்லார், அண்டினவர் தமைக்
கெடுப்பா ரழிவழக்கே சொல்வதவ ரறிவுதா
னே... .... (௬௮)

பொல்லார்க்குச்சலவிவரில கெர்வமுண்டா
மதனோடுபொருளுஞ்சேர்ந்தால், சொல்லாது
சொல்லிவைக்குஞ் சொற்சென்றாற் குடிகெ

டுக்கத் துணிவர்கண்டாய், நல்லோர்க்கிம்மூன்று குணமுண்டாகிலருளதிகஞானமுண்டாம், எல்லோர்க்கு முபகார ராயிருந்து பரகெதியை யெய்துவாரே.......................... (௧௧)

இதுவுமது-வேறு.

உந்தியின்சுழியின்மூச்சே லுரோமமாங்கரியநாகஞ், சந்திர னெனவேயெண்ணித் தைபலான் முகத்தைநோக்க, மந்திரி கரிகள்விம்மி வழிமறித்திடுதல்கண்டு, சுந்தரக்கயற்கணோடிச் செவிதனக்குரைத்ததம்மா................ (௰)

மாகமாமேடைமீதில் மங்கைநின் றுலாவக்கண்டேன், ஏகமாமதியென்றெண்ணி யிராகுவந்துற்றபோது, பாகுசேர்மொழியினுளும் பதிறியேபாகம்வாங்கத், தோகைமாமயிலென்றெண்ணித் தொடர்ந்ததாமீண்டதல்லோ .... (௰௧)

சலதாரைவிழுநீருஞ் சாகரந்தன்னைச்சார்ந்தார், குலமென்றே கொள்வதல்லாற் குறைகடலெவறுத்ததுண்டோ, புலவர்கள்சபையிற்கூறுப்புன்கவிதன்னைச்சார்ந்தால், நலமென்றேகொள்வதல்லானவில்வரோபெரியோர்குற்றம் (௰௨)

காரொறுங்குழல்கடப்பிக் கடுஞ்சிலைவாளிதப்பி, மேரொனவளர்ந்துநின்ற வேழத்தின்சோடுதப்பித், தாருறுகரியரோமச் சங்கிலிவழியே சென்று, சிரியரொனவளர்ந்த செல்வனல்குலிற் கைவைத்தான்.......................... (௨௰)

உண்டதைமொழிக்கும்வாச லோரநீரொழி த்துமேலே, வண்டழுமழுக்குஞ்சேரு மூதிர மூமாறுவாசல், உண்டதனிருப்பைக்கண்டுபெ ருங்களியுள்ளங்கொண்டு, கண்டனரிளைஞரெல் லாங் கனிமெனக்கருதுவாரோ...... ......(ஙச).

அறுசீரடியாசிரிய-விருத்தம்.

கரந்தொருவன்கணைதொடுக்க மேற்பறக்கு ம்ராஜாளிகருத்துங்கண்டே, உரந்தசிறுசானக த்தி லுயிர்ப்புறுபேடுதனக் குரைக்குங்காலை, வி ரைந்து விடந்தீண்டவுயிர்விடும்வேடன்கணையா ல்வல்லூறும்வீழ்ந்தது, தரல்செயலேயாவதல்லா ற்றன்செயலாலாவதுண்டோவறிவுள்ளோரே ()

அறுசீரடியாசிரிய- விருத்தம்.

கொல்லுலைவேற்குபற்கண் கெவ்வையங்கனி வாய்மாதே, நல்லணிமெய்யிற்பூண்டுநாசிசாபா ணமீதிற், சொல்லரிற்குன்றிதேடிச் சூடியதே ன்னென்றான், மெல்லிபல்கண்ணும்வாயும் புதைத்தனள்வென்றுதென்றான் .... *

சந்தக்கலிவிருத்தம்.

அருகிலிவளருகிலிவளருகில்வரவுருகும்... ...*
கரியகுழன்மேனியிவள்கானமயில்காயல் ... *
பெரியதனமிடைசிறிது பேனதயிலளையோ *
தெருவிலிவணின்றதில தெய்வமெனலாமே *

கலிவிருத்தம்.

அலகுவாள்விழியாயிழைநன்னுதற் .... *
றிலக்கண்டெதிர்செஞ்சிலையாரனுங் ... ... *

கலகமேசெய்யுங்கன்னிருவாமென ...... *
மலரம்பைபந்நையும்வைத்துவணங்கினாள் (௩௮)

இதுவுங்கலிவிருத்தம்.

குரங்குநின்று கூத்தாடியகோலத்தைக் கண்டே, அரங்குமுன்னிநாய் பாடிக்கொண் டாடியவதுபோல், காக்கணீட்டியேபேசிய கசடரைக் கண்டு , சிரங்களாடியேமெச்சிடுமறிவிலார் செய்கை......... .... (௩௯)

அறுசீரடியாசிரிய-விருத்தம்.

வில்லதுவளைத்ததென்றும் வேழமதுறங்கிற் றென்றும் , வல்லியம்பதுங்கிற் றென்றும் வளர் கடாபிந்திற்றென்றும் , புல்லர்தஞ்சொல்லுங் கஞ்சிப்பொருந்தினர் பெரியோரன்று , நல்ல தென்றிருக்கவேண்டே நஞ்செனக்கருதலாமே
சலந்தனிற்கிடக்குமானம சலத்தைவிட்டகன் றபோது , சொல்புரிவேடன் கண்டு கூறெயிற் கொண்டுசெல்ல, வலுவிருலவணைவெல்லவகை பொன்றுமில்லையென்றே, சலேபெவிகாதஞ்செய் தகதையெனவிளம்புவோமே........ ...(௩௰௧)

திலவதிற்றுணவான்றோன்றி னீள்குடித்தமரும்வாழ்வார். தழமெலாமவாசந்தோற்றஞ் சந்தனமரத்திற்சொப்பாய், நலமிலாக்கபவன்றோற் றினல் குடித்தேசம்பாழாங் , குலமெலாம்பழுதஞ்செய்யுங்கோடரிக்காம்புநேராம் (௩௰௨)

உரமுடன்மொழிவாண்வார்த்தை யுறுதிரிமில்லேசண்டாய் , மரமதில்கீழேயாமே வானவா

ரணத்தைதமானும், புரமதிருமலிகாலிற் பூட்டி
டமணிபோலாடு, தமிலான்மொழியும் வார்த்
தைதங்கத்திங்கட்டிபோலாம்... ... ...(௱௰௩)

நட்புடைக்குய்யமொத்தார் பிறர்மனை நலக்
தைச்செய்தார் கட்புடைக்காமத்தீயாற் கன்னி
யைவிலக்கினோரும், இட்டுடனஞ்சின்றோரா யு
ருகொண்டுநின்று, குட்டநோய்நரகில்வீழ்ந்து
குளிப்பவரிவர்கள்கண்டாய் ... . (௱௰௪)

மதியிலாமறையோன்மன்னன் மடந்தையை
வேட்கையாலே, ருதுவதுகாலத்தன்னிற் றே
ஷிமென்றுணாத்தேயாத்தில், புதுமையாலெடு
த்தபோது பெட்டியிற் புலிவாயாலே, அதிருட
ன்கடியுண்டன்றேபருநரகடந்தான்மாதே ... ()

மையதுவல்லிபம்வாழ்மலைக்குகைதனிற் புகு
ந்தோ, ஐயமுப்புலிக்குக்காட்டி படவியிற்றா
த்துங்காலை, பையவேநரிக்கோளாலே படுபொ
ருளுணரப்பட்ட, வெட்யவம் மிருகந்தானே
கொன்றிடவீழ்ந்ததன்றே .. .. (௱௰௬)

அறுசீரடியாசிரிய-விருத்தம்.

மங்கைதைகேசிசொற்கேட்டு மன்னர்புகழ்த
சரதனுமரணமானான், செங்கமலச்சீதை சொற்
லைச் சீராமன் கேட்டவுடன் சென்றான் மான்
பின், தங்கையர்தன்சொற்கேட்ட ராவணனுங்கி
ளையொடுதாலேமாண்டான், நங்கையர்சொற்
கேட்பதெல்லாங்கேடுவரும்பேருலகோர்நனா
ர்ட்பதாமே ... ... (௱௰௭)

வேறு. அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஆதியா யிருவர்நட்புக் கவமதிப் புறவர்க்கு
ள், சூதினாற்கபடஞ்செய்து துணைபிரிந்திடுவ
ரென்றால், வேதியின்பலவையாயின் மேவசைதாய்
ப்பச்சைசநாவி, பூதியர்கதைபோலாகியறுநரகெ
ய்துவாரோ ....(௱௰௮)

அருமையும்பெருமைதானுமறிந்துடன்படு
வர்தம்மால், இருமையுமொருமையாகு மின்பு
றக்கேதுவுண்டாம், பரிவிலாச் சகுனிபோலப்
புண்புசெட்டவர்கடம்பால்,ஒருமையினிரயமெ
ய்துமேதுவேயுயருமன்றோ... ... ... (௱௰௯)

ஒருவனே யிரண்டியாக்கைபூண் பொதியா
னநாற்றம், உருவமும்புகழுமாகுமவற்றுள் நீயி
ன்பமுற்று, மருவியயாக்கையிங்கேமாய்ந்திடுமெ
ற்றயாக்கை, திரமதாயுலகமேற்றச் சிறந்துபின்
னிற்குமன்றே ....(௱௨௰)

கலி-விருத்தம்.

வேலியானதுபயிர்தனைமேய்ந்திடவிதித்தா
ற், காலனானவனுயிர்தனைக்கவர்ந்திடநினைத்தால்
* ஆலமன்னையர்பாலகர்க்கருத்துவராரனால், மே
லிந்தார்ந்துடன்யார்கோலே விலக்குநர்வேந்
[தே

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அறங்கெடு நிதியுங்குன்று மாவியுமாயுங்கா
ம; நிறங்கெடுகதியும்போகு நீண்டதோர் நர
கிற்சேர்க்கு, மறங்கொடு மறையோர் மன்னர்

* ஆலம்-விஷம்.

வணிகர்நல் லுழவோரொன்றுங், குலங்கெடுவே
சைமாதர்குணங்களைவிரும்பினோர்க்கே(௱௨௨)

கட்டளைக்கலித்துறை.

அரவிந்தனண்பன்சுதன் றம்பிமைத்துன்ன
ன்னன்னையால், வரமுந்தியாய்தம்பூண்டவன்
காணுமற்றுக்கவளோ, பரமன்றிருக்கையை யூசி
யோன்மைந்தன் பகைவன்வெற்பர், காத்தி
னெடுத்தவன்மான்றன் சேவகன்காரிகையே ()
சங்கரன்றேவிதமயன்மனைவிதமக்குமூத்தா
ள், அந்தவளேறியவாகனங்காணுமுற்றுங்களோ
தொங்கைசயீனாந்துமுடையவனா யிக்குவலயத்
தி; லெங்குந்திரிகின்றவயிரவரேறியவாகனமே

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இந்திரன்பதங்கள்குன்று மிறைபவர்பதங்க
ண்மாற, மந்தரநிலைகள்பெருமலி கடல்வருமை
யாகும், சந்திரன்கதிரோன்சாயுந் தரணியிற்சே
யமானும், அந்தணர்கருமங்குன்றில் யாவரே
வாழ்வர்மண்ணில்... ....(௱௨௫)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

என்னனைக்கன்று முத்தனைக்குனிக்குமிறை
யனையனைக்குமேயன்று, மன்னனைக்கன்று பின்
னனைக்குதவா வன்புலால்வருந்திவாடுவனே, மு
ன்னனைக்கொன்று; பின்னனைப்புரந்த மூதப
கையவன்பிதாவெருமல், கன்னனைக்கொன்று
பின்னனைப் புரந்தகவுத்துவாராம கிருஷ்ணைய
னே...... .... (௱௨௬)

நேரிசைவெண்பா.

பண்டுடையோர்க் கோர்பறவை பாவத்திற்
கோரிலக்க, நண்பிலைக்காணிவிரு நாற்காலிதி
ண்புலிவை, ஆள்வார்மதுரைபூகியசொக்கரவ
ர், நீள்வாகனனென்னிவம்.... .... (௱௨௭)

சிறுவலைகளைடயறு செந்நெற்கேரு, மதிதிகிரி
தண்டுருணி நூர், டொறியரவம்வெற்றன்னப்பு
ள்ளேறு வேதனரன்மாலுக்குக்கற்றூழம் பூவே
சுறி........................ .... (௱௨௮)

சிரப்பார்த்தாணிடன் றேவிதனைப் டார்த்
தால், சரப்பார்த்தான்செங்கமலக்கண்ணன் உர
த்தூர், சிலைத்திண்டோளான்சிராமவண்ணு
ண், கலைமெருந்ததவெண்ணைமதனைக்கண்டு.... ( )

கலையிலும்மேலை கடையக்கயிறாகு, மாலையி
லும் பூமுடித்தகொழுமே, சோலையிலுஞ்-செய்
யிலாரந்திகழுஞ்செந்திருத்திமாநகர்வாழ் பா
ம்பிலார்மெய்யிவிடுப்பூண் .... (௱௩௰)

கட்டளைக்கலித்துறை.

சரியொன்றுபொன் மிகுப்பைபயேறி சர்ப்பவ
ர்சுற்றநதோழ, எறியொன்றுசெல்வன் றலாத்
தலத்தேநியிருண்டமஞ்சி, சொரிகின்ற நாகமி
றுசோற்றினிலேவமுன் சூழ்ந்துவர, நரியொன்
ல் சொந்தக்கணைலேறிசெர்ந்துநங்களத்தே. ௱௩௧

ஒருபாதிமால்கொள மற்றொருபாதியுமை
வள்கொண், டிருபாதியாலுமிறந்தன் டாரி
யிருந்திடயோ, பெருவாரிதியிற் பிறைவாணிறு

கம்பிலக்குழியிற், றரு ராஜபோசசொலடயுன்
லைகடோடெடன்லைகதந்தனனே... ... (௱௩௨)

(எண்சீரடியாசிரியவிருத்தம்)

கும்பமதக்கடக்களிற்றுன் றிலைவாழுங் .... .. *
கணபதியின் பெருவயிற்றை றக்கண்டுவாடி *
யும்பரெலாம் விழித்திருந்தா ரயில்வேற்செங் :
யுடையவருமுகனுக்கண்ணீராறுனுன் [கை
பம்புசுடற்கண்ணனும்மாநஞ்சுண்டான்மா *
பயமடைந்தானுமையுமுடற்பாதியானாள் *
அம்புவியைப்படைத்திடுவதவமீதையெய்.. *
றயனுமன்னமிறக்காமலணைகின்றானே ... ()

(குறங்கழிநெடில்விருத்தம்.)

காமமேகுலத்தினையுநலத்தினையுங் கெடுக்கவ
ந்தசளங்கந், காமமேதரித்திரங்களனைத்தினையும்
புகட்டிவைக்குங் கடாரங், காமமேபரகதிக்குச்
செல்லாமல்வழியடைக்குங்கபாடங், காமமேய
னைவரையும்பகையாக்கிக்கழுத்தறியுங் கத்திரா

(கலிவிருத்தம்.) [னே

குடாரிதன்னுமைபேரிகைசல்லரிடக்கை *
கடாகபெங்கணுமதிர்ந்திட வொலிந்திடக்காண
ல், விடாதநாணகன் றன்னியேபுருடனைவிழை
ந்தே, அடாதுசெய்தமங்கையர்வசை யொலித்
தல்போலடால் .... (௱௩௫)

விவேகசிந்தாமணி - முற்றிற்று.